RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1851

OPEN ACCESS

# சிங்கப்பூர் தமிழ்க் கல்வியின் சமூகத்தன்மையும் தமிழ் அமைப்பும்

க. செந்தில்குமாரி [அ, *]

[அ] அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Sociability and Tamil System in Singapore Tamil Education

K. Senthil Kumari [a, *]

[a] Department of Tamil Studies in Foreign Countries, The Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author:
sentilkumari85@gmail.com

Received: 01-09-2022
Revised: 19-09-2022
Accepted: 02-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Tamil peoples live all over the world. They leave the motherland and live in other countries that are completely different in terms of language, race, culture and customs. Even though they face lot of problems in the countries they migrated to, they maintain their mother language and culture. Even though Tamils are spread all over Malaysia, Singapore, America, Canada, England, Australia, the lifestyle of Singaporean Tamils is same as the lifestyle of Tamil people of Tamilnadu. The contribution of Tamil language education of the Singaporean Tamil is significant.

**Keywords:** Tamil Education, Singapore, Sociability, Tamil System, Language, Race, Culture

## முன்னுரை

தமிழர்கள் உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். தாய் மண்ணை விட்டு விலகி மொழியாலும், இனத்தாலும், பண்பாட்டாலும் பழக்க வழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்ட நாடுகளில் வாழ்கின்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளில் ஏராளமான சிக்கல்களை அவர்கள் எதிர்கொண்டாலும், தம் மொழியையும், பண்பாட்டையும் தக்கவைத்துக் கொள்ளுவதில் தன்னிகரற்றவர்களாக விளங்கி வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா எனத் திசையெங்கும் தமிழர்கள் பரவி இருந்தாலும் அவர்களில் சிங்கப்பூர்த் தமிழர் வாழ்வியல் தனித்துவம் நிறைந்தது. இந்தத் தனித்தன்மையைக் கட்டிக்காப்பதில் சிங்கப்பூர் தமிழ் மக்களின் தமிழ் மொழிக் கல்வியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூர்த் தமிழ்

சிங்கப்பூர் குடியரசில் தமிழ், ஆங்கிலம், சீனம் மற்றும் மலாய் ஆகிய நான்கு தேசிய மொழிகள் உலகிலேயே தமிழ் ஆட்சி மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் இருப்பது சிங்கப்பூர் குடியரசில் மட்டுமே. இங்கே தாய்மொழிக்கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் ஜாகீர்ஹீசேன் சிங்கப்பூருக்குச் சென்ற போது, தமிழ்மொழியைச் சிங்கப்பூர் நாடு அலுவலக மொழியாக ஏற்றுக்கொண்டதாலும் இந்தியப் பண்பாட்டு மன்றங்கள் உரிமையுடன் செயல்பட்டு வளர்ச்சியடைய வாய்ப்பளித்திருப்பதாலும் சிங்கப்பூரின் தேசிய ஒற்றுமை வளர்ச்சியில் இந்தியர்கள் எதிர்மறையில்லாத ஒத்துழைப்பைத் தருகின்றார்கள் என்று சிங்கப்பூர் அரசு ஒப்புக்கொள்கிறது எனத் தெளிவாகத் தெரிகின்றது என்று கூறினார்.

சிங்கையில் 1859 இல் இருந்து தமிழ் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. தமிழ்மொழி ஒரு பாடமாக 152 தொடக்கப்பள்ளிகளிலும் 176 உயர்நிலைப் பள்ளிகளிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் 10 உயர்கல்வி நிலையங்களிலும் சுமார் 490 தமிழாசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.

தமிழ் முரசு, தமிழ் மலர், மலாயா நண்பன், தமிழ்நேசன், முதலிய செய்தித்தாள்கள்தமிழ் இலக்கிய வளர்ச்சியின் களங்களாக இருந்து வந்தன. தற்போது தமிழ் முரசு மட்டுமே சிங்கையில் வெளிவருகிறது. சிங்கை எக்ஸ்பிரஸ், இந்தியன் மூவி நியூஸ் என்னும் இதழ்களும் தமிழ் இலக்கியப் படைப்புகளைத் தாங்கி வெளிவருகின்றன.

தமிழர் பேரவை, தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், மாதவி இலக்கிய மன்றம் சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்சம்,சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கழகம் முதலிய சமூக அமைப்புகள் அவ்வப்போது இலக்கியம் சார்ந்த விழாக்களை நடத்தி மக்களின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்ட உதவுகின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள தமிழ் இலக்கிய மன்றங்கள் இலக்கியம் தொடர்பான நிகழ்ச்சிகள், போட்டிகள் நடத்தி மாணவர்களிடையே இலக்கிய ஆர்வம் பெற வழிவகுக்கின்றன (Ramaiya, 1994).

## சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வரலாறும் கால வரிசையும்

தமிழகத்தில் பொருளாதார நிலையும் பின்தங்கியோரும் சமுதாய கட்டுப்பாடுகளால் தீய்க்கப்பட்ட வாடிய மக்களும் இலங்கை வாழ் மக்களும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் குடியேறினர். இலக்கியம் பற்றிய அக்கறை அவர்களுக்கு இருப்பதில்லை என்பது சமூகவியலாளரின் ஆய்வுக் கணிப்பு. இக்கூற்று ஓரளவே பொருந்துமாயின் சிங்கப்பூர், மலேசியாவுக்கு முற்றிலும் பொருந்தும் என்பதில்லை (Ramaiya, 2005).

திரு.நா. கோவிந்தசாமி சிங்கப்பூர்ச் சூழல், அரசியல் சமூகவியல் ஆகியவற்றின் அடிப்படையில் சில காலகட்டங்களை வரையறுத்துக் கொண்டு சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் கீழ்க்காணுமாறு மதிப்பிடுவார். 1. தொடக்கக் காலம்-1887-90, 2. சீர்த்திருத்தக் காலம்-1930-42, 3. ஜப்பானியர் ஆட்சிக் காலம்-1942-45, 4. இன எழுச்சிக் காலம்-1946-60, 5. குழப்பமான அறுபதுகள்-1961-70, 6. நிலைபெற்ற எழுபதுகள்-1971-79

## தமிழ்க் சிங்கப்பூர் கல்வியின் வளர்ச்சி

சிறந்த பண்பாட்டு வளமையும் இலக்கியச் செழுமையும் கொண்ட தமிழ் சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளுள் ஒன்றாக விளங்குகிறது. பள்ளிகளில் தாய்மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழ்க் கல்வி எனும் தொடரை, தமிழ்மொழிக் கல்வி, தமிழ் வழிக் கல்வி, தமிழ் பற்றிய கல்வி என மூன்று வகையாக நோக்கலாம். தமிழ்மொழிக் கல்வி என்பது கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் என நால்வகை மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்/டது. தமிழை வளர்க்க கற்றல் -கற்பித்தலில் இத்தகைய அடிப்படை திறன்களைத் திறம்படச் செயல்படுத்த வேண்டும்.

## தோற்றம்

சிங்கப்பூர் தமிழ்க் கல்வி வரலாற்றில் முதல் திருப்புமுனையாக ஒரு நிகழ்வு ஏற்பட்டது. சிங்கப்பூர் இலவசப் பள்ளி (Singapore Free School) என்ற பெயரில் பள்ளி முறையாகத் தமிழ்க் கல்வி கற்றலுக்கு ஆகஸ்டு 1834 ஆம் ஆண்டில் வழிவகுத்தது. அந்நாளில் தொடங்கப்பட்ட தமிழ் வகுப்பில் பதினெட்டுத் தமிழ் மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

## சிங்கப்பூர் தமிழ்க் கல்வியின் மேம்பாடு

சிங்கப்பூரில் தமிழாசிரியர்களாகப் பணிபுரிபவர்களில் பெரும்பாலோர் சிங்கப்பூர் கேம்பிரிட்ஜ் சாதாரணநிலை தேர்வுச் சான்றிதழ், சிங்கப்பூர் -கேம்பிரிட்ஜ் மேல்நிலை தேர்வுச் சான்றிதழ் எனக் கல்வித் தகுதி கொண்டவர்கள். சிங்கப்பூர் அரசாங்கத்தின் முதன்மை வேலை அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக விளங்க வேண்டும் என்பதே ஆகும். பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்குப் பட்டம் பெறுவதற்குக் கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு ஊக்கம் தந்ததுடன் நிதி உதவியையும் விடுப்பினையும் தருகிறது (Veerasamy, 2012). அந்த வகையில் தமிழாசிரியர்கள் தங்களை மேம்படுத்திக் கொண்டனர். தமிழாசிரியர்கள் சிலர் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில முற்பட்டனர். வாசுகி, வீரமணி, சண்முகம் போன்றோர் ஆங்கிலத்திலேயே பட்டக் கல்வியைக் கற்றனர்.

## சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கத்தின் அமைப்பு நிலை

1951 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் சங்கம் தோற்றம் கண்டு குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டு இப்போது சுமார் 600 உறுப்பினர்களைக் கொண்டு திகழ்கிறது. சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழாசிரியர் சங்கம் தங்களது உறுப்பினர் நலனுக்கு முதன்மைக் கொடுத்துப் பாடுபடுகின்றது. சிங்கப்பூர் தமிழ்க் கல்வியில் அதிகம் நாட்டம் செலுத்த வேண்டும் என்றும் குறிக்கோளைக் கொண்டு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கையெழுத்துப் போட்டி போன்ற இலக்கியப் போட்டிகளை நடத்தி வெற்றி கண்டுள்ளது.

தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பாக ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பித்தல் எனும் தலைப்பில் முதல் ஆய்வரங்கு 1971 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் ஆசிரியர் பயிற்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதை வளாகத்தில் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவும் தமிழாசிரியர் சங்கமும் சேர்ந்து நடத்தின.

## தமிழ்க் கல்வி வளர்ச்சியில் தமிழாசிரியர்களின் பங்கு

தேர்ச்சித் திறன்மிக்க தமிழாசிரியர்கள் பலர் தமிழாசிரியர்த் தொழிலைத் தியாகத்துடன் ஆற்றி வருகின்றனர். 1950களில் பள்ளி நிர்வாகத்தினர் பொதுமக்களிடமிருந்து திரட்டித்தந்த குறைந்த வருமானத்தை மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டனர். மூத்த ஆசிரியர்கள் சிலர் இக்கருத்தை தெரிவித்தனர். அவர்தம் அருஞ்செயல் பாராட்டுக்குரியதாகும் (Veerasamy, 2012).

## சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கழகம்

1976 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கழகம் சிங்கப்பூர்த் தமிழர்களுக்கும், தமிழ்க் கல்விக்கும் அருந்தொண்டு ஆற்றி வருகிறது. குறிப்பாகத் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குக் கழகம் அருஞ்சேவை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இக்கழகம் ஆண்டுதோறும் முத்தமிழ் விழா என்னும் பெயரில் இலக்கிய விழாவை நடத்தி வருகிறது. இவ்விழாவின் வாயிலாக தமிழ் இலக்கிய போட்டிகளை நடத்துகிறது. தமிழ் மாணவர்கள் பொதுமக்களுக்கென சிறுகதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தியது. தமிழ் மாணவர்களுக்கென திருக்குறள் மனப்பாட போட்டியை நடத்தித் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குப் பெருமை சேர்த்தது (Veeramani, 2020).

## சிங்கப்பூர் தமிழ் இளையோர் மன்றம்

சிங்கப்பூர் தமிழ் இளையோர் மன்றம் 31.12.1988 ஆம் ஆண்டில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் கருப்பொருளில் மாநாட்டை நடத்தி பல கட்டுரைகள் படைக்கப்பட்டன. சிங்கப்பூரில் தமிழ்மொழி எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பிலான கட்டுரையை டாக்டர். சுப. திண்ணப்பன் அவர்களும் தமிழாசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களும் சிக்கல்களும் எனும் தலைப்பிலான

கட்டுரையை அவர்களும் படைத்துள்ளனர் (Ramaiya, 1994). சண்முகம் போன்றோர் ஆங்கிலத்திலேயே பட்டக் கல்விக் கற்றனர் (Ramaiya, 2005).

மாணவர்களுக்குத் தமிழ்மொழி மீது பற்று விருப்பத்தினை வளர்க்க வேண்டிய தேவை 1998 களில் இருந்தமையால் மாணவர்களின் மொழித்திறனை வளர்ப்பதற்குச் சங்கம் பல இலக்கியப் போட்டிகளை நடத்தியது. தமிழ் கற்றல், கற்பித்தலில் உன்னநிலை என்னும் கருப்பொருளில் பல ஆய்வுக் கட்டுரைகள் படைக்கப்பட்ட முதல் வகை தமிழாசிரியர் மாநாட்டைச் சங்கம் 1992 ஆம் ஆண்டில் நடத்தி வெற்றி கண்டது. மாநாட்டின் ஏற்பாட்டுத் தலைவராக திரு.வி.ஆர். மாணிக்கம் நியமிக்கப்பட்டார். 1993 ஆம் ஆண்டில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் 13 ஆசிரியர்களைக் கொண்டு தொடக்க உயர்நிலை மாணவர்களுக்குத் தமிழ் துணைப்பாட வகுப்புகள் தொடங்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டில் உலகளாவிய நிலையில் தமிழாசிரியர்களுக்கும் கற்றல் கற்பித்தலில் எழுச்சியும் மதிப்பும் ஏற்பட்டுள்ளன. இவ்வகையில் தமிழாசிரியர்கள் சங்கம் 30.12.1989 ஆம் ஆண்டில் தமிழ் இளையர் மன்றம் நடத்திய மாநாட்டில் கடந்த 25 ஆண்டுகளில் தமிழ்க் கல்வி ஒரு கண்ணோட்டம் என்னும் கட்டுரையும் சிங்கப்பூரில் தமிழ் பாட நூல் வளர்ச்சி என்னும் கட்டுரையும் தமிழ் கல்வி பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தாங்கி மலர்ந்தன.

## முடிவுரை

தமிழ்ப் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ், உயர்நிலை வகுப்புகளில் தமிழ், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளில் தமிழ் எனப் பல்வேறு நிலைகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சிங்கப்பூர் தமிழ்மொழிப் பாடத்திட்டம் மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், சிந்தித்தல் ஆகிய அடிப்படைத் திறன்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

## References

Ramaiya, K. (1994) Singaporeil Tamilmozhi Ilakkiya Valarchi, Singapore University, Singapore.

Ramaiya, K. (2005) Singaporeil Tamil Kattral Karpithal Thodarpana Aaivu, Singapore University, Singapore.

Veeramani, A. (2020) Singaporil Tamil Ilakkiya Valarchi 1965-1990, Nagoori Wordpress, Singapore.

Veerasamy, Samy, (2012) Singaporil Tamil Ilakkiya Valarchi 1965-1990, Ennaiyathalam, Singapore.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License